**தலைப்பு 176 – துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 மே 19 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 நவம்பர் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

# 2 நிதி மீளாய்வு

## 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் 03 கருத்திட்டங்களில் 23 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 7,485,000 தொகைக்கான தேறிய ஏற்பாடுகளில் பயன்படுத்தப்பட்டிருந்த ஏற்பாடுகள் ரூபா 4,495,486 தொகையாக காணப்பட்டதுடன் அதன்படி மீதியான ஏற்பாடுகள் ரூபா 2,989,516 தொகையாக இருந்தது. அதன்படி 23 செலவு விடயங்களுக்காக தேறிய ஏற்பாடுகளில் 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆண்டிற்கான 03 இடைக்கால வாக்குப்படி கணக்குகளின் கீழ் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு ஒன்று 2020 செப்தம்பர் மாதத்தில் வழங்கப்பட்டது. அதேபோல் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையும் காரணமாக அமைந்தது. அதனால் உரிய முறையில் மதிப்பீடு செய்யப்படாமையால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்ததென்பது நடைமுறை சாத்தியமற்றது என கருணையுடன் அறிவிக்கின்றேன். | நி.பி. 50 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய முறையில் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களை அணுகுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆண்டிற்காக ரூபா 6,395,851 இற்கான பொறுப்புக்கள் 2021 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் தீர்க்கப்பட்டிருந்ததுடன், இந்த செலவுகள் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் பொறுப்புக்கள் என இனங்கண்டிருக்கவில்லை. மேலும் மூன்று கருத்திட்டங்கள் தொடர்பாக 17 செலவு விடயங்களில் சேமிப்பினை மிகைத்து ரூபா 4,192,277 தொகைக்கான பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது. | பாதீடு தயாரித்தல் நிதி அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் என மீதியாக ஏற்பாடுகள் காணப்படின் மாத்திரமே கணக்கீடு செய்வதற்கு இயலுமாகும். காசு அடிப்படையில் தயாரிக்கப்படும் பாதீட்டில் ஏற்பாடு மீதியொன்று காணப்படாவிடின் அட்டுறு அடிப்படையில் கணக்குகள் தயாரிப்பதற்கு பொறுப்புக்கள் தொடர்பாக ஏற்பாடுகள் ஒதுக்குவது தொடர்பாக நடைமுறைச் சிக்கல் ஒன்று காணப்படுகின்றது.<br>பாதீடு தயாரித்தல் நிதி அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதனால் ஏற்பாட்டு எல்லையை மிகைத்து குறிப்பிட்ட ஆண்டில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை. | நி.பி. 94 இல் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் மதிப்பீடு ஏற்பாடுகள் இன்றி பொறுப்புக்களுக்கு அணுகக் கூடாது என. |

## 2.3 முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடம் இருந்து 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 171,402 தொகை காணப்பட்டதுடன், இந்த மீதி 16 வருடங்களை மிகையான காலம் முதல் அறவீடு செய்ய முடியாமல் முன்கொண்டு வந்து காணப்பட்டது. மேலும், நீண்டகாலம் முதல் முன்கொண்டு வந்து காணப்படும் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து | இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 05 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 171,403 தொகைக்கான கடன்மீதியை பதிவழிப்பதற்காக பொது நிதித் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டவுடன், அதன் பரிந்துரையின் படி கடன்மீதியை பதிவழிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டு விடயங்களை ஆய்வு செய்து குழுவின் அறிக்கை 2019.10.18 திகதி சமர்ப்பிக்கப்பட்டது.<br>வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தரிடம் அறவிடப்படவேண்டிக் காணப்பட்ட | நிலுவை கடன் மீதியை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 293,470 இற்கான கடன் மீதி மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 21,140 இற்கான கடன் தொகை 2020 ஆண்டு இறுதி அளவிலும் அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. | ரூபா 293,470 இற்கான கடன்மீதி, அவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் புலனாய்வு ஆணைக்குழுவினால் உயர் நீதிமன்றத்தில் தாக்குதல் செய்திருந்த வழக்கின் தீர்ப்பின் படி மற்றும் அந்த உத்தியோகத்தர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு முடிவாக்கப்பட்டு அவருக்கு செலுத்த வேண்டிய பணிக்கொடை கொடுப்பனவு செலுத்த நேரிட்டால் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br>சேவையை விட்டு சென்றுள்ள உத்தியோகத்தரிடம் அறவிடப்படவிருந்த ரூபா 21,140 இற்கான தொகையை அறவீடு செய்தல் தொடர்பான முன்னேற்றம் ஒன்றினை காட்ட முடியாத நிலைமையில் உள்ளதென அறிவிக்க விரும்புகின்றேன். | |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் படி அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தவேண்டியிருந்துடன் அம் முறைமையின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை பயன்தரு விதமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதெனவும், அம் மீளாய்வுகள் எழுத்துமூலம் | பதில் வழங்கியிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| | அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) | நிதிப் பிரமாணம் 104 | 05 வாகனங்களின் விபத்துக்கள் தொடர்பாக நி.பி. 104 இன் படி விசாரணை ஒன்று நடாத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | வெளித் தரப்பினருக்கு சேதம் ஏற்படல் அல்லது மூன்றாம் தரப்பினருக்கு கொடுப்பனவு மேற்கொள்வதற்கு நேரிட்டிருக்காததுடன், வாகனங்களை திருத்துவதற்காக அமைச்சில் இருந்து கொடுப்பனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் நி.பி.104 விசாரணை நடாத்தப்படவில்லை. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் நடைபெறும் வாகன விபத்துகளுக்காக நி.பி.104 விசாரணை முறைப்பிரகாரம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிடுகின்றேன். | வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 136, 137 | பரிந்துரைத்தல், அதிகாரமளித்தல் மற்றும் அங்கீகரித்தல் ஒரே உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டு ரூபா 387,815 தொகை பெறுமதியான 02 உறுதிச் சீட்டுக்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டது. | கொவிட் தொற்றுநோய்க் காலப் பகுதியாக இருந்தமையால் நிறைவேற்று உத்தியோகத்தர்களும் கடமைக்கு வருவது வரையறுக்கப்பட்ட நாட்களாகும். உறுதிச் சீட்டுகளுக்காக பரிந்துரை வழங்கல், அதிகாரம் அளித்தல், அங்கீகரித்தல் என்ற விடயங்கள் உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு முடியாமல் போனதுடன், சேவைக்கு வந்த பின்னர் பூர்த்தி செய்வதற்காக | பணம் செலுத்தும் போது நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தொலைபேசி மூலம் இணக்கம் பெறப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்வதற்கு குறித்துக் கொண்டேன். | |
| (இ) | நிதிப் பிரமாணம் 139(10)(ii) | காசோலை இலக்கங்கள் உறுதிச் சீட்டுக்களில் பதிவு செய்யும் போது 02 சந்தர்ப்பங்களில் பிழையான காசோலை இலக்கம் இடப்பட்டிருந்தது. | ஜுன் மாதம் 64, 65 ஆகிய இலக்க இரண்டு உறுதிச் சீட்டுக்களில் காசோலை இலக்கங்கள் மாறி பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | கொடுப்பனவு மேற்கொள்ளும் உத்தியோகத்தரினால் காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம் உறுதிச் சீட்டு இலக்கத்துடன் இணங்குவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 261(1) | தொடர் முறை ஒன்றின்றி இலக்கமிடப்பட்ட கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் காசேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் புத்தகத்தின் தொடர் முறைப்படி இலக்கமிடப்பட்டு உறுதிச் சீட்டுக்கள் பதிவதற்காக பொறுப்பாக உள்ளேன். | காசேட்டில் தொடர் முறையில் உறுதிச் சீட்டு இலக்கமிடப்பட வேண்டும் என. |
| (உ) | நிதிப் பிரமாணம் 272(3) | 2020 ஆண்டின் போது ரூபா 800,983 தொகை பெறுமதியான 05 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் 2021 மார்ச் 31 திகதி வரை கணக்காய்வுக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | இவ்வாறான தாமதங்களை தவிர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கும் படி உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | குறிப்பிட்ட மாதம் முடிவடைந்து 06 வாரங்கள் கடக்க முன்னர் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | நிதிப் பிரமாணம் பிரிவு 371(2)(ஆ) | ஏதேனும் விஷேட கருமம் ஒன்றிற்காக நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 தொகை உச்ச அளவு வரை நிமித்தக் கட்டுநிதி வழங்குவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு முடியுமாக இருந்த போதிலும், 02 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 தொகை மற்றும் 50,000 தொகை என நிறைவேற்று அல்லாத உத்தியோகத்தர்களுக்கு | முறையான சுகாதார அறிவுரைகளை கடைபிடித்து அமைச்சின் மற்றும் வர்த்தக கப்பற்றுறை செயலகத்தின் அலுவல்கள் பணம் செலுத்தி கொள்வனவு செய்வதற்காக அமைச்சின் வழங்கல் நடவடிக்கை மேற்கொள்ளும் வழங்கல் உத்தியோகத்தருக்கு, பிரதான நிதி உத்தியோகத்தரின் மற்றும் பிரதான கணக்காளரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்வதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | நிமித்தக் கட்டுநிதி வழங்கும் போது நிதிப் பிரமாணங்கள் மற்றும் நடைமுறையிலுள்ள சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கட்டுநிதி வழங்கப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | | |
| (எ) | நிதிப் பிரமாணம் 371(5) மற்றும் 2015 ஜூலை 14 திகதிய 03/2015 இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கை | 12 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 344,517 தொகைக்கான துணைக் கட்டுநிதிகள் தீர்த்தல் 24 நாட்கள் முதல் 327 நாட்கள் வரை தாமதம் அடைந்திருந்ததென அவதானிக்கப்பட்டது. | கௌரவ அமைச்சரின் அலுவலகமும் வர்த்தக கப்பற்றுறை செயலகம் உட்பட அமைச்சின் வெவ்வேறான பிரிவுகளுக்காக தடைகள் இன்றி செயற்படுவதற்காக பல்வேறு செலவுகள் மேற்கொள்வதற்காக சில உத்தியோகத்தர்களுக்கு கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தது. | துணைக் கட்டுநிதி வழங்கும் போது நிதிப் பிரமாணங்கள் மற்றும் பொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும் என. |
| (ஏ) | 2018 ஜனவரி 17 திகதிய 01/2018 இலக்கம் கொண்ட பொதுநிதிச் சுற்றறிக்கை | வர்த்தக கப்பற்றுறை செயலகத்தினால் வழங்கப்படும் கப்பல்களை பதிவு செய்தலை சாட்டுதல் மற்றும் ஈடுவைத்தல் பொருட்கள் மற்றும் பிரயாணிகள் எடுத்துச் செல்லும் கப்பல் கட்டணம், மாலுமிகளை சேவைகளில் ஈடுபடுத்தல் மற்றும் அவற்றிலிருந்து விடுவித்தல் மற்றும் கப்பலுக்கு வழங்கப்படும் சேவைக் கட்டணம் போன்ற தேவைகளுக்காக அறவிடப்படும் 16 கட்டண திருத்தங்கள் தொகுதிகளைச் சேர்ந்த கட்டணத் திருத்த வரைபு ஒன்று 2019 ஆகஸ்ட் 05 திகதி முதல் நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், 2021 மார்ச் 31 திகதி அளவிலும் அவை அவதானிப்பு மட்டத்தில் காணப்பட்டது. இந்தக் கட்டணம் 15 வருடங்களை விட மிகையான காலம் முதல் திருத்தப்படாமல் காணப்படுவதால் கணிசமான அளவு அரச | சேவைகள் வழங்கும் போது அறவிடப்படும் கட்டணம் 15% இனால் அதிகரித்து தயாரிக்கப்பட்டிருந்த கட்டண திருத்த வரைபு 2018.02.12 திகதி பொது நிதித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் கட்டணத் திருத்த வரைபிற்கு பொது நிதித் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்கவில்லை. எனினும், வர்த்தக கப்பற்றுறை செயலகத்தினால் மூலம் அறவிடப்படும் கப்பல்களை பதிவு செய்தல் அதனொடு தொடர்புடைய கட்டணங்கள் இலங்கைக்கு அண்மையிலுள்ள ஏனைய நாடுகளில் அறவிடப்படும் கட்டணத்துடன் ஒப்பீடு செய்து தயாரிக்கப்பட வேண்டியிருந்ததால் சில கட்டணங்கள் அதிகரிக்காமல் இருப்பதற்கு நேரிடுவதனால் அறவிடப்படும் கட்டணம் 10 வருடங்களாக திருத்தப்படாமையால் 15% ஐ மிகைத்து அதிகரிப்பதற்கு சந்தர்ப்பம் காணப்படுவதனால், பொருத்தமான விதத்தில் கட்டணத் திருத்த வரைபு ஒன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கும் படி பொது நிதித் திணைக்களத்தினால் வாய்மூலம் எமக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | 01/2018 இலக்க 2018 ஜனவரி 17 திகதி கொண்ட பொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| வருமானத்தை இழந்துள்ளது. | அதன்படி, செயலாளரின் அங்கீகாரத்துடன் நியமனம் செய்யப்பட்டிருந்த குழு ஒன்றினால் மீண்டும் திருத்திய கட்டண திருத்த வரைபு தயாரிக்கப்பட்டு 2019.02.30 திகதி பொது நிதித் திணைக்களத்திற்கு அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அந்த கட்டணத் திருத்த வரைபு தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று திறைசேரிப் பிரதிச் செயலாளரின் தலைமையில் நடைபெற்றது. அந்தக் கலந்துரையாடலில் கப்பற்றுறை துறையுடன் தொடர்புடைய நிறுவனங்களின் அபிப்பிராயங்கள் மற்றும் யோசனைகள் பெறப்பட்டு மீண்டும் வரைபினை சமரப்பிக்கும் படி திறைசேரி பிரதிச் செயலாளரினால் அறிவுரை வழங்கப்பட்டது.<br><br>அதன்படி, அமைச்சுச் செயலாளரின் தலைமையில் கப்பற்றுறை துறையினைச் சேர்ந்த நிறுவனங்களுடன் கலந்துரையாடல் நடாத்தி அந்த நிறுவனங்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகள் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. தொடர்ச்சியாக விடுவித்தல் சான்றிதழ்கள் (CDC) மற்றும் தேர்ச்சிச் சான்றிதழ் வழங்குதல் நாளதுவரை ஆக்குதல் பிரதிகள் வழங்குவதற்காக திருத்தப்பட்ட கட்டணம் மேற்கூறிய கட்டண திருத்த வரைபில் உட்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி மேற்கூறிய கட்டண திருத்த வரைபுக்கு அங்கீகாரம் பெற்ற பின்னர் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி அல்லாத சொத்துக்கள் பதிவேட்டின் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 15 மில்லியன் தொகை பெறுமதியான 04 கார் வண்டிகள் மற்றும் 02 கப் வண்டிகள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சினால் பண்டகசாலை வசதிகள், கொள்கலன் முற்றம், துறைமுக வழங்கல் வசதிகள் மற்றும் வள்ளங்கள் மற்றும் கப்பல் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்கு 2020 செப்தம்பர் மற்றும் ஒக்தோபர் மாதங்களில் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2021 ஏப்ரல் 19 அளவிலும் அவற்றின் உரிமையை முறைப்பிரகாரம் உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி அந்த வாகனங்கள் இராஜாங்க அமைச்சினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | 06 வாகனங்கள் பண்டகசாலை வசதிகள் கொள்கல முற்றம், துறைமுக வழங்கல் வசதிகள் கப்பற்றுறை கைத்தொழில் இராஜாங்க அமைச்சுக்கு சாட்டப்பட்டிருந்தது. அந்த அமைச்சின் வாகனத் தேவையை நிறைவேற்றிக் கொள்ளும் வரை தற்காலிக அடிப்படையாக இருந்தமையால் அந்த வாகனங்களின் உரிமை அவ்வமைச்சுக்கு உரித்தாக்கப்படவில்லை. | 2017 திசெம்பர் 13 திகதிய 259/2017 இலக்கம் கொண்ட பொதுக் கணக்கு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | அமைச்சுக்கு சொந்தமான ரூபா 60,000,000 தொகை பெறுமதியான மோட்டார் வாகனம் ஒன்று பணம் அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்காததுடன், ஜனாதிபதிச் செயலகத்திற்கு சொந்தமான ரூபா 10,500,000 தொகை பெறுமதியான மோட்டார் வாகனம் ஒன்று பணம் அல்லாத சொத்துக்கள் என காட்டப்பட்டிருந்தது. அதன்படி, நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள நிதி அல்லாத சொத்துக்கள் ரூபா 49,500,000 தொகை குறைவாக சித்தரித்துக் காட்டப்பட்டிருந்தது. | ஒரு மோட்டார் வாகனம் நீதி அமைச்சின் தற்போதைய செயலாளரினால் உத்தியோகபூர்வ பிரயாணங்களுக்காக எடுத்துச் சென்றிருப்பதனால் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்காததுடன், அடுத்த ஜீப் வண்டியை அமைச்சுக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முறையான நடவடிக்கை முறையின் படி சொத்துக்களை உரித்தாக்குவதற்கும் மற்றும் சாட்டுதல் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மற்றும் சொத்துக்கள் பதிவேடு சரியாக பேணப்பட வேண்டும் எனவும். |